**தலைப்பு 161 – வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **நடைமுறைப்படுத்தப்பட்டிராத பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.2.2 | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக ஒருங்கிணைந்த பரீட்சை மீதிக்கமைய காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 37,074,415 தொகையான முதலீட்டு நடவடிக்கைகளில் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியான விதத்தில் காசு பாய்ச்சல்கள் காண்பிக்கப்பட வேண்டும் என்பது. | 1.6.1(அ) |

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பௌதீக சொத்துக்களின் புனரமைப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டு செலவினம் ரூபா 8,939,169 காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக பௌதீக சொத்துக்களின் கீழ் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகளாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செலவினங்களை சரியாக வகைப்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்க வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடியுமான அளவில் முழுமையாகவும் சரியானதாகவும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் மீளாய்வாண்டுக்காக 25 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாடு நூற்றுக்கு 55 முதல் நூற்றுக்கு 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புகள் அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்ததவாறு செலவினம் ஏற்படாமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடியுமான அளவில் முழுமையாகவும் சரியானதாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

2.2 **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி பேணிச்செல்லப்படுவதை பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும் அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கு உரிய கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நிதி கட்டுப்பாட்டிற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படுகின்றமை மற்றும் நிதி கட்டுப்பாட்டுக்கு உள்ளக கட்டுப்பாட்டு முறையில் ஆக்கபூர்வமான தன்மையை கண்காணித்து அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு உரிய மாற்றங்களை மேற்கொண்டு அவ்வப்போது மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றமை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் - சுற்றாடல் கட்டமைப்பின் பாதுகாப்பு மமற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுற்றாடல் கட்டமைப்புகளின் முகாமைத்துவத்தினை அதிகரிப்பதன் மூலம் அந்த சுற்றாடல் கட்டமைப்பினை பாதுகாத்து அதனூடாக பொதுமக்களுக்கு நலன்களை பெற்றுக் கொள்ளும் | நீண்டகால சுற்றாடல் பாதுகாப்பிற்கு நிறுவனத்தின் திறன்கள் மற்றும் முதலீட்டு இயலளவினை அதிகரித்தல் முக்கியமானது என்பதால் ஒட்டுமொத்த நிதியேற்பாட்டில் 55 சதவீதம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை | செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றுதல் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கிடங்க செயல்திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக காணப்பட்டதுடன் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல் மற்றும் பேணுவதற்கு இயற்கை வளங்களை நிலைப்பேறான தன்மையுடன் பயன்படுத்துதல் மற்றும் யானை மனித முரண்பாடற்ற வாழ்வினை ஏற்படுத்துதல், பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை பேணுதல் மற்றும் முகாமை செய்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்து சுற்றாடலுக்கு சினேக பூர்வமான சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்தி செய்தல் போன்றவை சுற்றாடல் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயறிட்ட அலகுகளுக்கு ரூபா 3,117 மில்லியன் எனும் 38 சதவீதமான குறைந்த வீதாசாரமும் நிறுவனத்தின் இயலுமை அபிவிருத்தி மற்றும் முதலீட்டு இயலளவினை அதிகரிப்பதற்கு ரூபா 4,386 மில்லியன் எனும் ஒட்டுமொத்த நிதியில் 55 சதவீதமும் ஒதுக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளதுடன் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஏற்பட்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு பொருளாதார பின்னடைவுகள் காரணமாக செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்ற தேவையான பிரிவுகள், பயிற்சி நிலையம், அதற்கு தேவையான விடுதி, மற்றும் ஏனைய வசதிகளை வழங்க முன்னுரிமை வழங்க நேரிட்டது. | திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக ரூபா 0.72 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொணராகல மாவட்டத்தின் ரத்துகல பிரதேசத்தின் 105 குடும்ப அலகுகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் 05 செயற்பாடுகள் | வேடுவ தலைவரின் விருப்பமின்மை, வலயக் கல்வி அலுவலகத்தின் மூலம் உரிய பரிந்துரையை பெற்றுக்கொள்ள தவறியமை மற்றும் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது இருந்தமை ஆகிய காரணங்களால் ரத்துகல கல்லூரிக்கு அண்மையதாக திட்டமிடப்பட்ட பணிகளை இடைநிறுத்த நேர்ந்தது. | உரிய செயல் திட்டங்கள் உரிய காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 232.93 மில்லியன் நிதியேபாட்டின் கீழ் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேலும் 009 பணிகளை நிறைவேற்ற முடியாது இருந்தது. | | |
| (இ) | உடவளவ தேசிய பூங்காவின் ஊடாக குடும்பம் ஒன்றுக்கு 80 பேர்ச் பாரப்பளவான காணியில் வெற்றிலை பயிரிடுவதற்கு வசதிகளை வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 0.770 மில்லியன் செலவிடப்பட்டு 14 குடும்ப அலகுகளுக்கு வழங்கப்பட்டிருந்த வெற்றிலை கன்றுகள் நோய்க்குள்ளாகி அறுவடையை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் அழிவடைந்திருந்தன. | தென் மாகாணத்தில் வெற்றிலை கன்றுகள் நோய்க்குள்ளானமையால் பண்ணையாளர்களுக்கு நிவாரண விலையில் மீண்டும் வெற்றிலை கன்றுகளை வழங்குவதற்கு வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. | உயர்தரமுடைய உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கும் பின் தொடர்தல் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் வன சீவராசிகள் திணைக்களத்தினால் பிரிவு 3(a) பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் ரூபா 61.5 மில்லியன் நிதியேற்பாட்டின் மூலம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 07 நடவடிக்கைகளில் பௌதீக செயல் முன்னேற்றம் 32 சதவீதத்திற்கும் 65 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிலும், பிரிவு 3(b) பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் அண்டியதாக சுற்றாடல் சார்ந்த சுற்றுலா கைத்தொழிலினை மேம்படுத்தும் நடவடிக்கையின் கீழ் ரூபா 10 மில்லியன் நிதியேற்பாட்டின 02 நிர்மாண பணிகளின் | நிலவிய எரிபொருள் பற்றாக்குறை மற்றும் கட்டிடப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்த காரணத்தால் சிங்கராஜ மற்றும் நக்கல்ஸ் நிர்மாணம் நிறுத்தப்பட்ட போதிலும் செயற்த்திட்ட முகாமைத்துவ பிரிவினால் செயற்த்திட்ட காலத்தினுள் அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய செயல் திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமாகவும் காணப்பட்டது. | | |
| (உ) | வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினதும் வன பாதுகாப்பு திணைக்களத்தினதும் நிறுவன இயலுமை அபிவிருத்தி செய்வதற்காக சேர்த்திட்ட முகாமைத்துவ அலகினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்ப மதிப்பீடு ரூபா 1,913 மில்லியன் ஆன 06 செயற்திட்டங்கள், ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு மீண்டும் ரூபா 1,738 மில்லியனுக்கு புதியதொரு செயற்திட்டமாக 2023 மே 31 பூர்த்தி செய்வதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த செயற்திட்டத்திற்காக ஆரம்ப மதிப்பீட்டினை வீஞ்சி அதிக கிரயம் செலவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது | நாட்டில் நிலவிய பொருளாதார வீழ்ச்சி காரணமாக கட்டுமான பொருட்கள் பற்றாக்குறையானமை மற்றும் விலை உயர்வடைந்தமை ஆகிய காரணங்களால் முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியமையால் அவர்களை செயற்திட்டத்திலிருந்து நீங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய சந்தையில் நிலவும் விலைகளின் அடிப்படையில் புதிய ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அந்த செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு செயல்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு நேர்ந்தது. | உரிய செயல் திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 30 உத்தியோகத்தர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்பட்ட இலங்கை தகைமைகள் வழிகாட்டல் கோவை (SLQF) 3 ஆம் மட்டத்திற்கு உரிய வனசீவராசிகள் முகாமைத்துவம் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறியில் 2017/2018 தொகுதிக்கு அளவிடப்பட்ட பாடநெறி கட்டணம் ரூபா.3,300,000 ஆனபோதிலும், 2019/2020 தொகுதிக்கு அதனை விட ரூபா 11,700,000 கூடுதலாக ரூபா | திட்டமிட்டபடி கிரிதலையில் அமைந்துள்ள வன சீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் பாடநெறியை நடாத்துவதற்கு முடியாது இருந்த காரணத்தால் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ள நேரிட்டமையும், கள உத்தியோகத்தர்களுக்கு இயலுமை அபிவிருத்திக்கான பெரும்பாலான கற்கைகள் இலங்கை முழுவதும் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அண்மித்ததாக மேற்கொள்ள வேண்டியதாக இருந்த | உரிய வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டியதுடன் செலவினம் குறைக்கப்படும் வகையில் திட்டமிட வேண்டும். |

15,000,000 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இந்த பாடநெறிக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 38,819,579 ஆனமையால் ஒரு உத்தியோகத்திற்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் 1,293,333 ஆக காணப்பட்டது. அந்த பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்ட SLQF 8 பிரிவின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறியில் மாணவர் ஒருவருக்கான கட்டணம் ரூபா 250,000 ஆக காணப்பட்டமையும், கொழும்பு பல்கலைக்கழகத்தினை தெரிவு செய்யும் போது உலக வங்கியின் செயற்பாட்டு வழிகாட்டல் பின்பற்றப்பட்டிராமையும், பல்கலைக்கழகத்திற்கு செலுத்திய ரூபா 21,590,108 தொகைக்கான பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதிகள் மற்றும் ரூபா 12,785,500 தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்குரிய உறுதிச் சீட்டுக்களின் மூலப்பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்களில் காரணமாக இதனை சிக்கனமான நடவடிக்கையாக அவதானிக்க முடியாது இருந்தது.

காரணத்தால் இந்த பாடநெறிக்கு அதிக கிரயம் மேற்கொள்ள நேரிட்டது.

**3.2 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஜூன் 01 ஆந் திகதி ஆறு மாடிகளை கொண்ட சினோ லங்கா கட்டிடத்தில் 04 மாடிகள் 22,522 சதுர அடிகள் பரப்பளவான இடத்தில் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு நடத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் 2021 மே 31 ஆண்டு உடன்படிக்கை காலம் நிறைவடைந்தமையால் 2021 ஜூன் மாதம் 01 முதல் 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் 02 வருட காலத்திற்காக கோரப்பட்ட கூறுவிலைகளின் பிரகாரம் அதற்கு அண்மையில் அமைந்திருந்த கட்டிடம் ஒன்றிலிருந்து கிடைத்திருந்த ரூபா 121,618,800 எனும் விலையினை கருத்திற் கொள்ளாது அதனை விட ரூபா 18,561,425 அதிகமாக ரூபா 140,180,225 தொகைக்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் இந்த கட்டிடம் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த கட்டிடத்திற்காக அரசின் மாதாந்த மதிப்பீடு ரூபா 8,100,000 ஆன போதிலும் அதனை விட ரூபா 4,383,593 அதிகமாக ரூபா 12,483,593 ஆன மாதாந்த வாடகை இக்கட்டத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சினை நடாத்திச் செல்வதற்கு அரசின் கட்டிடம் ஒன்றில் இட வசதியை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | இந்த அமைச்சிக்காக இதுவரையிலும் நிர்மாணித்தவாறு உள்ள செத்சிரிபாய கட்டம் 111 இன் கட்டிடத்தில் இடம் கிடைக்கும் வரை அமைச்சினை நடத்திச் செல்லும் ராஜகிரிய, சினோலங்கா கட்டிடத்தினுள் 2021ஜூன 01 ஆம் திகதி முதல் இரண்டு வருடங்களுக்கு நடத்திச் செல்ல முடியும் என நிதி அமைச்சினால் உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் இந்த அமைச்சினால் அதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் குறைக்கப்படும் விதத்தில் பணிகள் திட்டமிடப்பட வேண்டும். |

4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியை 148 ஆனபோதிலும், உள்ளபடியான பதவியணி 110 ஆகும். அதனுள் சிரேஷ்ட மட்டத்திலான 16 பதவிகள் உள்ளடங்களாக 38 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதைய பதவியணியின் அடிப்படையில் பணிகளை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையில் பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |